# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

## I. இயேசுகிறிஸ்து யார் ?

இயேசுகிறிஸ்துவைக் குறித்து வெவ்வேறு ஜனங்களுக்கு வெவ்வேறு கருத்துகள் உண்டு சிலர் அவரை தேவன் என்று சொல்வார்கள். வேறு சிலர் அவர் தேவனில் ஒரு பகுதி என்றும் தெய்வத்துவத்தின் மூன்றில் ஒரு பங்கு என்றும் பாதி தேவன் என்றும் தேவத்தூதர்கள் என்றும் தீர்க்கதரிசி என்றும் அல்லது ஒரு நல்ல மனிதன் என்றும் சொல்வார்கள். எந்த மனிதனுடைய கருத்தையும் நாங்கள் நம்ப விரும்பவில்லை. இயேசுவைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறதோ அதைத் தான் நாங்கள் நம்ப விரும்புகின்றோம்.

பாடம் ஒன்றிலே படித்ததுப்போல வேதாகமம் ஒரு நபரின் கருத்தல்ல அது சத்தியத்தை நிலைநாட்டுகிறது இயேசுவினுடைய சகல ஆசீர்வாதங்களையும் விடுதலையையும் சுகத்தையும் இரட்சிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு. இயேசு யார் என்ற இந்தப்பாடம் மிக முக்கியமானது. இயேசுவைக் குறித்ததான சரியான புரிந்துக் கொள்ளுதலை இது நமக்கு அளிக்கும். வேதரீதியாக இயேசுவைக் குறித்து சரியானப் புரிந்துக்கொள்ளுதல் இல்லையென்றால் சத்தியத்தை பெற்றுக் கொள்வதற்கான சக்தியை நாம் இழந்து விடுவோம்.

ஆகவே வேதாகமத்தைப் படித்து இயேசு யார்? என்பதை கண்டுப்பிடிக்கலாம்

## II. தேவன்

முதலாவதாக வேதாகமத்தைப் படித்து தேவனைப் புரிந்துக் கொள்ளலாம்.

### A. தேவன் ஒருவரே

ஒரே தேவன் இருக்கிறார் என்று பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் நமக்கு போதிக்கின்றன.

#### பழைய ஏற்பாடு

**உபாகமம் 6:4-9** “ *இஸ்ரவேலே, கேள்: **நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.***
*5 நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு*
*ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. 6 <u>இன்று நான் உனக்குக்</u>*
*<u>கட்டளையிடுகிற</u> இந்த வார்த்தைகளை உன் இருதயத்தில் இருக்கக்கடவது. 7 நீ அவைகளை*
*உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும்,*
*வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்*
*குறித்துப் பேசி, 8 அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக;*
*அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. 9 அவைகளை உன்*
*வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.* ”

யூத ஜனத்தின் அன்றாட விசுவாச அறிக்கையாக ‘ஷெமா’ எனப்படுகிற இந்த வேதப்பகுதி தேவனைக் குறித்ததான அடிப்படை சத்தியமாகும் : இஸ்ரவேலே கேள்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் பழைய ஏற்பாட்டில் தோன்றும் மூன்று பகுதிகளிலே தேவனைக் குறித்து இந்த வல்லமையானத் தத்துவம் காணப்படும். எண்ணாகமம் 15:37-41 உபாகமம் 6:4-9 மற்றும் 11:13-21. தேவனைக்குறித்து இந்த அடிப்டைச் சத்தியத்தை இயேசு மறுபடியுமாக கூறினார்.

புதிய ஏற்பாடு

**மாற்கு 12:29-31** “ *இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள்,* ***நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.*** *30* ***உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக*** *என்பதே பிரதான கற்பனை. 31* ***இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே;*** *<u>இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.</u>* ”

தேவன் ஒருவரே என்று பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் நமக்குப் போதிக்கின்றன. சத்தியம் என்றைக்கும் மாறினதில்லை பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்கள் ஒரே தேவனிலே விசுவாசமாயிருந்தார்கள் (மோனோதியிசம்) புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவ சபையும் ஒரே தேவனில் விசுவாசமாயிருந்தது. அநேக தேவர்கள் மேல் அல்ல (பாலிதியிசம்) அப்போஸ்தலர்கள் தேவன் ஒருவராய் இருக்கிறார் என்பதைக் கற்றுக் கொடுத்தார்கள்

**யாக்கோபு 2:19** “***தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய்,*** *<u>அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து</u>, நடுங்குகின்றன.*”

சாராம்சமாக பழையஏற்பாடு தேவன் ஒன்றாக இருப்பதைக் குறித்து பேசுகிறது. தேவனை பரிசுத்தமுள்ளவர் (சங்கீதம் 71:22, 78 41 ஏசாயா 1:4 5:19 5:24) என்று அநேக முறை வேதத்திலே அழைக்கப்பட்டிருக்கும் பரிசுத்தமுள்ள இருவர் என்றோ பரிசுத்தமுள்ள மூவர் என்றோ அல்லது பரிசுத்தமுள்ள அநேகர் என்றோ என்றைக்கும் வேதம் அழைத்ததில்லை சத்தியம் மாறுவதில்லை தேவனாகிய கர்த்தர் கர்த்தர் ஒருவரே என்பதை நாம் விசுவாசிக்கவேண்டுமென்று இன்னமும் கர்த்தர் வாஞ்சிக்கிறார்.

**B. தேவன் தனியாக இருக்கிறார். அவர் தனியாகவே தேவனாக இருக்கிறார்.**
கீழ்கொடுக்கப்பட்ட வேதப் பகுதிகளிலிருந்து தேவனைக் குறித்து நீங்கள் என்ன புரிந்துக் கொள்ள முடியும்?

**சங்கீதம் 86:10** “*தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர்;* ***நீர் ஒருவரே தேவன்.*** ”

**ஏசாயா 43:10-11** “*நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்கு முன் ஏற்பட்ட தேவன்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

*இல்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்;* ***என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.***"

**2 சாமுவேல் 7:22** "*ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும்,* ***தேவரீருக்கு நிகரானவர் இல்லை:*** *உம்மைத்தவிர வேறேதேவனும் இல்லை.*"

**1நாளாகமம் 17:20** "*கர்த்தாவே, நாங்கள் எங்கள் காதுகளால் கேட்ட எல்லாவற்றின்படியும்* ***தேவரீருக்கு நிகரானவர் இல்லை;*** *உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை.*"

**ஏசாயா 44:8** "*நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்; அக்காலமுதற்கொண்டு நான் அதை உனக்கு விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததுமில்லையோ? இதற்கு நீங்களே என் சாட்சிகள்,* ***என்னைத் தவிர தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே; ஒருவனையும் அறியேன்.***"

பதில் வேதம் மிகத் தெறிவாக இருக்கிறது. கா்த்தரைத் தவிர வேறொரு தெய்வம் இல்லை அவா் அருகிலும் வேறொரு தேவன் இல்லை.



**சாவி # 1 :** <u>ஒரே ஒரு தேவன் இருக்கிறாா் அவா் ஒருவரே</u>

### C. தேவன் ஆவியாக இருக்கிறாா்

**யோவான் 4:24** "*தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*"

கா்த்தருடைய ஒருத்துவத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு அவருடைய சுபாவத்தையும் அவா் இப்படியாக இருப்பதின் காரணத்தையும் புரிந்துக் கொள்ள வேண்டும். தேவன் ஆவியாக இருக்கிறாா் என்று யோவான் 4:24-ல் இயேசுச் சொன்னாா் ஆவி என்றால் என்ன? வெப்டா் மொழியாக்கம் ஆவியை இவ்வாறாக விவரிக்கின்றது. "மனிதா்களிடத்தில் காணப்படாத இயற்க்கைக்கு அப்பாா்ப்பட்ட பகுத்தறிவுள்ள தன்னுடைய சுயத்தின்படி தரிசனமாக வல்லமைப் பெற்ற ஒன்று" ஆவி என்பதற்கு எபிரெய மொழியில் ரூவாக் இதின் அா்த்தம் காற்று சுவாசம் ஜீவன் ஒரு பகுத்தறிவுள்ளவரின் ஆவி என்பதாகும். ஆவி என்பதற்கு கிரேக்க மொழயில் 'நியூமாா்க்' அதாவது வீசும் காற்று சுவாசம் அல்லது காற்றாகும்.

மாம்சமும் எலும்புகளும் இல்லாத ஒன்று தான் ஆவி என்று எல்லா விளக்கங்களும் காட்டுகின்றன தேவன் ஆவியாயிருக்கிறாா் என்று வேதம் சொல்லும் போது அவா் அதரிசனமானவரும் சரீரப்பிரகாரமாகத் தொட முடியாதவரும் இயற்க்கைக்கு அப்பாற்பட்ட வரும் ஞானமுள்ளவருமானவா் என்று அா்த்தமாகும்.. தேவன் ஆவியாக

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

இருப்பதால் தன்னை மனிதர்கள் பார்க்கும்படி வெளிப்படுத்துவதற்கு தேர்ந்தெடுத்தாலொழிய அவர் அதரிசனமாகவே இருப்பார்.

யாத்திராகமம் 33:20:

**யோவான் 1:18** "*தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.*"

**1யோவான் 4:12** "*தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.*"

**1தீமோத்தேயு 6:16** "*ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*"

**கொலோ 1:15** "*அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*"

**1தீமாத்தேயு 1:17** "*நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*"

**எபிரெயர் 11:27** "*விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்.*"

தேவனை வெவ்வேறான வடிவில் மனிதர்கள் பார்க்க முடிந்தாலும் தேவனுடைய அதரிசனமான ஆவியை ஒருவரும் பார்க்க முடியாது.



**சாவி # 2 : <u>தேவன் ஆவியாயிருக்கிறார்</u>**

### C. தேவன் சர்வ வல்லமை உள்ளவரும் சர்வ வியாபியும் சர்வ ஞானியுமாய் இருக்கிறார்.

**சர்வ வியாபி : எல்லா இடத்திலும் இருக்கக் கூடியவர்**

ஆவியாக இருக்கிற தேவன் ஒரே நேரத்தில் எல்லா இடத்திலேயும் இருக்க முடியும் அவருடைய ஆவி மாத்திரம் தான் உண்மையான சர்வ வியாபியாய் இருக்கிறது. சாத்தான் தேவதூதர்கள் பிசாசுகள் மற்றும் வேறே ஆவிகள் ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் அடங்கி இருப்பார்கள் (மாற்கு 5:10 யூதா 6 வெளி 20:1-3). தேவன் எல்லா இடத்திலும் இருந்தாலும் கூட நாம் காணக்கூடிய காரியங்களில்

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

தேடி சேவிக்கிறவரும் அல்ல (பான்தியிசம்) அவர் மரமோ தண்ணீரோ நட்சத்திரங்களோ அண்டசராசரமோ இயற்கையோ அடங்கி உள்ள ஒருவரும் அல்ல நாம் பார்க்கக் கூடியக் காரியங்களை அவர் சிருஷ்டித்தார் ஆனால் நாம் பார்ப்பது அவர் அல்ல

**1இராஜாக்கள் 8:27** " *தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?* "

**சங்கீதம் 139:7-13** " *உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? 8 நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். 9 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், 10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். 11 இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். 12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.* "

**கேள்வி : தேவன் சர்வ வியாபியாக இருந்தால் அவர் பரலோகத்திலே இருக்கிறவர் என்று வேதம் ஏன் சொல்கிறது?**

தேவன் எல்லாவற்றையும் மீறிச் செல்லுகிறவர் அதாவது அவர் மனுஷனுடைய அறிவுக்கு மிஞ்சினவரும் இந்த பூமியிலே எல்லை இல்லாதவருமாய் இருக்கிறார். கர்த்தருடைய செயல்களுக்கும் விவேகத்திற்கும் மையமாகதான் பரலோகம் இருக்கிறது இது சொல்லப் போனால் அவருடைய தலைமை செயலகம் ஆகும்.

**கேள்வி : கர்த்தர் பூமிக்கு வந்தார் என்றோ ஒருவருக்கு தரிசனமானார் என்றோ வேதம் சொல்லும்பொழுது அவர் சர்வ வியாபியாய் இருக்கிறதை இது நிறுத்துகிறதா?**

இல்லை அவருடைய செயல்கள் ஒரு குறிப்பிட்ட நபரின் நிமித்தமோ அல்லது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் காரணமாகவோ பூமிக்கு மாற்றப்பட்டது என்றுதான் அர்த்தம். ஆவர் ஒரே சமயத்தில் வானத்திலும் பூமியிலும் கிரியை செய்ய முடியும் அல்லது பூமியிலே பல் வேறு இடங்களிலும் கிரியை செய்ய முடியும்.

**தேவன் சர்வ ஞானியாயிருக்கிறார் எல்லாம் அறிந்தவர்**

**சங்கீதம் 139:1-6** "*கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். 2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். 3 நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். 4 என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். 5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

*நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். 6 இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது.*"

**1தீமோத்தேயு 1:17** " *லே தாம் ஒருவரே ஞானமுள்ள தேவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது எல்லாவற்றையும் குறித்ததான பூரணமான ஞானம் பெற்றவர் தேவன். அறிந்துக் கொள்ள என்னவெல்லாம் இருக்கிறதோ அதை அவர் அறிந்திருக்கிறார். அவர் எதிர் காலத்தைக் காண்கிறவரும் எல்லா எண்ணங்களையும் படிக்கிறவருமாய் இருக்கிறார். தேவன் மாத்திரம் சர்வ ஞானியாய் இருக்கிறார்.* "

### தேவன் சர்வ வல்லவராயிருக்கிறார் எல்லா வல்லமையும் உடையவர்

**ஆதியாகமம் 35:11** "*பின்னும் தேவன் அவனை நோக்கி: நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிடத்திலிருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள்.* "

**யோபு 22:26-27** "*அப்பொழுது சர்வவல்லவர்மேல் மனமகிழ்ச்சியாயிருந்து, தேவனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர். நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண, அவர் உமக்குச் செவிகொடுப்பார்; அப்பொழுது நீர் உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர்.* "

**யோபு 42:2** " *தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.*"

தேவன் ஒருவரே வல்லமை உள்ளவராய் இருக்கிறார் அவர் அனுமதித்தாலேயன்றி அந்த வல்லமையை ஒருவராலும் பெற்றுக் கொள்ள முடியாது. அல்லது அது இருந்தாலும் ஒருவராலும் பயன்படுத்த முடியாது. அவருடைய நீதியுள்ள சுபாவத்தின் நிமித்தம் கர்த்தர் தாமே அவருக்கு சில அளவுகளை உருவாக்கியிருக்கிறார். இதைத் தவிர அவருக்கு அளவுகள் கிடையாது உதாரணமாக அவர் பாவமில்லாதவரும் பரிசுத்தமுள்ளவராகவும் இருக்கிறார். அவர் நீதியுள்ள சுபாவத்தில் தங்குகிறவராய் இருக்கிறார். ஆகையால் அவராலே அவருடைய வார்த்தைக்கு மாறுபட்டு ஒன்றும் சொல்ல முடியாது அவராலே பொய்யும் சொல்ல முடியாது. (தீத்து 1:2 எபிரெயர் 6: 18-ஐ பார்க்கவும்)

### E. சிருஷ்டிகராகிய கர்த்தர் நம்முடைய பிதா

**மல்கியா 2:10** " *நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம்பண்ணுவானேன்?*"

**ஏசாயா 37:16** " *சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்.* "

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

**ஏசாயா 44:24** “ *உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர், நான் ஒருவராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர்.* ”

**ஏசாயா 45:18** “ *வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச்செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.* ”

**ரோமர் 8:14-16** “ *மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.*”

சிருஷ்டிகராகிய கர்த்தர் நம்முடைய பிதா அதையல்லாமலும் கர்த்தருக்கும் மனுஷனுக்கும் உள்ள உறவை (குறிப்பாக மறுபடியும் பிறந்தவர்களுக்கு) பிதா என்கிற பட்டம் வெளிப்படுத்துகிறது.



**சாவி # 3** **தேவன் சர்வ ஞானியும் சர்வ வல்லமையுள்ளவரும் சர்வ வியாபியும் நம் சிருஷ்டிகரும் மற்றும் நம் பிதாவுமாக இருக்கிறார்.**

## II. இயேசுவே தேவன்

### A. தேவன் மனுஷனாக மாறினார்.

**1தீமோத்தேயு 3:16** “*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.*”

### B. தேவன் ஏன் மனுஷனாக மாறினார் ?

மனுஷனையும் தேவனையும் பாவம் சதாகாலத்திற்கும் பிரித்ததை ஆதியாகமத்தில் (பாடம் 1) வெளிப்பட்டதைக் கண்டோம். மனுக்குலத்தின் பாவங்களுக்கு தேவன் ஒரு தற்காலிகமான மன்னிப்பை கூடாரத்தில் அன்றாடம் பலி செலுத்தப்பட்ட மிருகங்களின் மூலமாகவும் (பாடம் 5) தேவாலயத்திலும் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தோல் உடைக் கொடுப்பதற்காக செலுத்தப்பட்ட முதல் மாற்று ஈடு பலியின் மூலமாகவும் தேவன் அளித்தார் ஆனால் மனுக்குலத்தின் பாவங்களுக்காக

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

மிருகங்களாலே நித்தியமான விலையை (மரணம்) செலுத்தமுடியவில்லை ஆகவே ஆவியாய் இருக்கிற தேவன் இயேசு கிறிஸ்து என்ற பாவமில்லாத சரீரத்தின் மூலம் தோன்றி அதில் வசித்து மனுக்குலத்தின் பாவத்திற்கு நித்திய விலையை அளித்தார்.

**ஏசாயா 59:15-20** "*சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்; இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார்.*
*16 ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால்* ***<u>அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி</u>****, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. 20* ***மீட்பர்*** *சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*"

**2 கொரிந்தியர் 5:18-19** "*இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19 அதென்னவெனில்,* ***<u>தேவன்</u>*** *உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்,* ***<u>கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி</u>****, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*"

**தீத்து 2:13-14** "*நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும்,* ***<u>மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய</u>*** *மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. 14 அவர்* ***<u>நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.</u>***"


சாவி # 4 <u>நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்க தேவன் மாம்சமானார்.</u>

### C. இயேசுகிறிஸ்து : கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

கீழ்கொடுக்கப்பட்ட வேதப்பகுதிகளை வாசித்த பிறகு இயேசு யார் என்ற கேள்விக்குப் பதில் எளிதாகக் கிடைக்கும்.

**லூக்கா 2:11** " *இன்று* ***கர்த்தராகிய கிறிஸ்து*** *என்னும்* ***இரட்சகர்*** *உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.*"

**ஏசாயா 7:14** "*ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு* ***இம்மானுவேல் என்று பேரிடுவாள்.***"

**மத்தேயு 1:21-23** "*அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்,* ***அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக****; ஏனெனில்* ***அவர் <u>தமது ஜனங்களின்</u> பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்*** *என்றான். 22 தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

*இதெல்லாம் நடந்தது. 23 அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு **தேவன் நம்மோடு இருக்கிறார்** என்று அர்த்தமாம்."*

தேவனில் ஒருபங்காகவோ தேவனால் அனுப்பபட்ட பிரதிநிதியாகவோ (தீர்க்கதரிசியைப் போலவோ) இயேசு இல்லை. தேவன் நம்மோடுகூட இருக்கிறார் என்றவர் வேறொருவருக்கு சொந்தமான ஜனங்களை பாவத்திலிருந்து இரட்சிக்க அவர் வரவில்லை. ஆனால் தன்னுடைய சொந்த ஜனங்களை பாவத்திலிருந்து மீட்கவே தேவன் வந்தார்.

### D. இயேசு தேவனாகவும் கர்த்தருமாய் இருக்கிறார்

**யோவான் 20:28-29** "*தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: **என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்**. 29 அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.*"

அப்போஸ்தலனாகிய தோமா இயேசுவை ஆண்டவர் என்றும் தேவன் என்றும் அழைத்தான். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரும் மனுஷனைத் தன் சாயலாக உருவாக்கினவரும் ஆன தேவனாகிய கர்த்தர் (ஆதி 2:4,7). திகைத்துப் போன அப்போஸ்தலனுக்கு முன்பதாக மாம்சத்திலே நின்றார்.

**தேவனுடைய சாயல்**

**2 கொரிந்தியர் 4:4** "*தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் ...தேவனானவன்.*"

**கொலோ 1:15** "*அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*"



சாவி # 5 <u>அதரிசனமான தேவன் மாம்சத்திலே இயேசுவாக வெளிப்பட்டார்</u>

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

### நித்திய பிதாவும் வல்லமையுள்ள தேவனும்

**ஏசாயா 9:6** “ *நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.*”

**யோவான் 14:8-9** “ *பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?*”

### தேவத்துவத்தின் பரிபூரணம் சரீரப் பிரகாரமாய் இருந்தது.

**கொலோ 2:9-10** “*ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.*”

### இரட்சகர்

**2 பேதுரு 1:1** “*இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்,*”

**ஏசாயா 43:10-11** “*நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்கு முன் ஏற்பட்ட தேவன் இல்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.*”

### தேவனும் மனுஷனுமானவர்

குமாரன் என்ற தேவனுடைய பட்டம் இயேசுவின் மனுஷத்துவத்தைக் குறிக்கிறது. நம்மைப்போலவே 100% மனுஷனாக இயேசு இருந்தார் என்பதை இந்த தலைப்பு வெளிப்படுத்துகிறது.

**1தீமோதேயு 3:16** “*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்.* ”

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

**எபிரெயர் 2:17-18** "*அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.*"

100% மாம்சத்திலே தேவனாக இயேசு வந்தார் மனுஷனாக அவர் ஒரு சமயத்திலே ஒரு இடத்தில் மட்டும் கட்டுப்பட்டார் அவர் சோர்ந்து போனார். ஆவர் பசியாகவும் இருந்தார். ஆனால் தேவனாக தன் சொந்த மரித்த சரீரத்தை கல்லறையிலிருந்து உயிர்த்தெழச் செய்து அற்புதங்களை செய்து பாவத்தை மன்னித்தார். அவர் மெய்யாகவே மாம்சத்தில் தேவனாக இருந்தார்.

| மனுஷனாக இயேசு | தேவனாக இயேசு |
|---|---|
| 1. குழந்தையாகப் பிறந்தார் (லூக்கா 2:7) | நித்திய நித்தியமாகத் தோன்றினார்(மீகா 5:2 யோவான் 1:1-2) |
| 2. சமுதாய ரீதியாகவும் ஆவியிலும் சரிரத்திலும் சிந்தையிலும் அவர் வளர்ந்தார் (லூக்கா 2:52) | அவர் மாறுவதேயில்லை (எபிரெயர் 13:8) |
| 3.சாத்தானாலே சோதிக்கப்பட்டார் (லூக்கா 4 :2) | பிசாசுகளைத் துரத்தினார் (மத்தேயு 12:28) |
| 4. பசிக் கொண்டார் (மத்தேயு 4:2) | ஜீவ அப்பமானார் (யோவான் 6:35) (திரளான ஜனங்களை அற்புதமாக போஷித்ததர் மாற்கு 6:38, 44,52) |
| 5. தாகமாய் இருந்தார் (யோவான் 19:28) | ஜீவ தண்ணீர் ஆனார் (யோவான் 4:14) |
| 6. கலைத்துப் போனார் (யோவான் 4:6) | இளைப்பாறுதல் கொடுத்தார் (மத்தேயு 11:28) |
| புயலிலே தூகினார். (மாற்கு 4. 38) | புயலை அதட்டினார் (மாற்கு 4:39-41) |
| 8. ஜெபித்தார் (லூக்கா 22:14) | ஜெபத்திற்கு பதில் அளித்தார் (யோவான் 14:14) |

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

| | |
|---|---|
| 9. சாட்டையாலே அடிக்கப்பட்டார் (யோவான் 19 1-3) | வியாதியஸ்தர்களை சுகமாக்கினார் (மத்தேயு 8:16-17 1பேதுரு 2:24) |
| 10. மரித்தார் (மாற்கு 15:37) | தன் சொந்த சரீரத்தை மரணத்திலிருந்து உயிர்பித்தார் (யோவான் 2:19-21 20:9) |
| 11. பாவங்களுக்கு பலியானார் (எபிரெயர் 10:10-12) | பாவத்தை மன்னித்தார் (மாற்கு 2:5-7) |
| 12. எல்லாவற்றையுமே அறியாதவராயிருந்தார் (மாற்கு 13:32) | எல்லாம் அறிந்தவராயிருந்தார் (யோவான் 21:17) |
| 13. வல்லமை இல்லாதிருந்தார் (யோவான் 5:30) | எல்லா வல்லமையும் உடையவராய் இருந்தார். (மத்தேயு 28:18 கொலே 2:10) |
| 14. தேவனுக்குக் கீழே இருந்தார் (யோவான் 14:28) | தேவனுக்கு சமமாக இருந்தார் - தேவனாக இருந்தார் (யோவான் 5:18) |
| 15. வேலைக் காரராய் இருந்தார் (பிலிப் 2: 7-8) | இராஜாதி இராஜனாய் இருந்தார் (வெளி 19:16) |

இயேசுவைக் குறித்ததான சரியானப் புரிந்துக். கொள்ளுதல்.

இயேசு முழுமையாக மனுஷனாகவும் முழுமையாக தெய்வமாகவும் இருந்தார் என்பதை சரியாகப் புரிந்துக் கொள்வோமேயானால் தெய்வத்துவத்தைக் குறித்ததான எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும் வேதத்தைப் படித்து அது அவருடைய தெய்வத்துவத்தைப் குறித்து அல்லது மனுஷத் துவத்தைக் குறித்து அல்லது இரண்டையும் குறித்து விவரிக்கிறதா என்பதை நாம் முடிவு செய்யலாம் இயேசு பேசும் போது அவர் மனுஷனாக அல்லது தெய்வமாக அல்லது இரண்டாகவும் பேசுகிறாரா என்பதை நாம் வாசிக்க முடியும். ஒரே தெய்வம் தான் இருக்கிறார் என்பதினால் தெய்வத்துவத்தில் இரண்டு ஆட்களோ அல்லது இரண்டு தேவர்களோ இருக்கிறார் என்பதை நாம் சிந்திக்க முடியாது ஆகவே நாம் உண்மையான மனுஷனின் மாம்சத்தையும் தேவ ஆவியுமாக நினைக்கவேண்டும். ஆண்டவரோடுகூட இருக்கும் உறவிலே நாம் எவ்வாறாக நம் மனுஷத்துவத்தை காண்பிக்கிறோமோ இயேசுவும் அப்படியே காண்பித்தார். (பாவத்தை தவிர) இப்படியிருந்தும் அவர் தேவனாக செயல்பட்டு பேசினார்., உதாரணமாக அவர் தூங்கிக் கொண்டிருந்தாலும் மறு நிமிடத்திலே சீறும் புயலை சமாதானமாக அடக்க வல்லவராயிருந்தார். இயேசு மனுஷனாகவும் பேசினார். அதே சமயத்தில் தேவனாகவும் இருந்தார்.

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

சாவி # 6 <u>இயேசு மனுஷனாகவும் தெய்வமாகவும் இருக்கிறார்.</u>

## III. தேவனுடைய நாமம்

**சகரியா 14:9** "*அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.*"

**அப்போஸ்தலர் 4:12** "*அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*"

**கொலே 3:17** "*வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.*"

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை வேதத்தை வாசிக்கும் போது தன்னைக் குறித்ததான புதுக் காரியங்களை வெளிப்படுத்த கர்த்தர் நாமங்களையும் பட்டங்களையும் உபயோகித்தார் என்பதை நாம் கண்டடைய முடியும். அவர் அந்த நாமத்திற்கு எப்படி பொருந்துகிறார் என்றும் ஒவ்வொரு புதிய நாமாத்துடனும் மற்றும் பட்டத்துடனும் மக்கள் அவரை ஒரு புதிய வழியில் அறிந்து கொள்வதற்கு இது விளக்கமாக இருக்கிறது.

| பழைய ஏற்பாட்டின் பெயர் | பழைய ஏற்பாட்டு வேதப்பகுதி | இயேசு நம்முடைய | புதிய ஏற்பாட்டு வேதப்பகுதி |
|---|---|---|---|
| யெகோவா யீரே(தேவைகளை சந்திக்கிறவர்) | ஆதி 22:14 | தேவைகளை சந்திக்கிறவர் (பலியின்) | எபிரெ 10:10-12 |
| ஏகோவா ராப்பா சுகம் தருபவர். | யாத் 15:26 | பரிகாரி | யாக் 5:14-15 |
| யெகோவா நிசி (ஜெயக் கொடி | யாத் 17:15 | ஜெயம் | 1கொரி 15:57 |

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

| | | | |
|---|---|---|---|
| யெகோவா மெக்காதீஸ் (பரிசுத்தபடுத்துவார்) | யாத் 31:13 | பரிசுத்தமாக்குபவர் | எபேசி 5:26 |
| யெகோவா ஷாலேம் (சமாதானம்) | நியாதி 6:24 | சமாதானம் | யோவ 14:27 |
| யெகோவா சபயோத் (சேனைகளின் கர்த்தர்) | 1சாமு 1:3 | சேனைகளின் கர்த்தர் | யாக் 5:4-7 |
| யெகோவா ஈலியோன் (உன்னதமான கர்த்தர்) | சங்கீதம் 7:17 | உன்னதமானவர் | லூக்கா 1:32 76,78 |
| யெகோவா ரூவா (மேய்ப்பர்) | சங்கீதம் 23:1 | மேய்ப்பர் | யோவ 10:11 |
| யெகோவா ஓசேனு (உருவாக்குபவர்) | சங்கீதம் 95:6 | உருவாக்குபவர் | யோவ 1:3 |
| யெகோவா ஸிட்கேனு (நீதியுள்ளவர்) | எரே 23:6 | நீதியுள்ளவர் | 1கொரி 1:30 |
| யெகோவா ஷம்மா (கூடவே இருப்பவர்) | எசேக்கி 48:35 | கூடவே இருப்பவர் | மத்தே 28:20 |

கர்த்தர் மாம்சத்திலே தோன்றியவுடன் அவரை 'இயேசு' என்று வெளிப்படுத்திக் கொண்டார். ஒரு புதிய நாமம் வேதத்திலே மறுபடியுமாக வெளிப்படுத்தப்பட வில்லை. மனுக்குலத்தை மீட்கவந்தவரும் ஒரே மெய்யான தேவனுமாகிய கொடுக்கப்பட்ட பூரணமும் கடைசியுமான நாமமாகும். இயேசுவுக்கு (யெகோவா என் இரட்சண்யம்) என்று அர்த்தம்.


**சாவி # 7** **<u>ஒரே மெய்யான தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட நாமம் தான் இயேசு</u>**

**மத்தேயு 21:8-11** "*திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். முன்நடப்பாரும், பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில், நகரத்தார் யாவரும்*

# வேதாகமத்தின் பூட்டைத்திறப்பது

## பாடம் 6B

*ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள். அதற்கு ஜனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்றார்கள்.*"

திரளான ஜனங்கள் இன்றும் இயேசு யார் என்று அறிந்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அவரை இன்னும் அநேக விதமாய் அழைக்கிறார்கள். ஆனால் நமக்கோ அவருடைய நாமம் தெரிந்திருக்கிறது. வேதத்தின் படியாகவும் அவர் யார் என்பதையும் நாம் அறிந்துக் கொண்டிருக்கிறோம்..

(எடுத்துக்கூறு குறிப்புகள் மற்றும் அட்டவணைகளும் டேவிட் பெர்னார்டின் தேவனின் ஒருத்துவம் என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது)